சி.சி.எண். **92/2024** அ.சா.**1,** பிரியா த.பெ . தனசேகரன் தேதி **07.10.2025**

(1ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்.2 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 2 முதல் 6 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குவிமுச பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி திரும்ப அழைக்கப்பட்டுள்ளார்)

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

நான் B.E படித்துள்ளேன். எனது திருமணம் இரு வீட்டார் பேசி முடிக்கப்பட்டது. 1ஆம் எதிரியான எனது கணவருடைய தந்தை திருமணத்தின் போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். 1ஆம் எதிரியின் தந்தையான எனது மாமனார் எங்களது திருமணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பே இறந்துவிட்டார். 1ஆம் எதிரிக்கு ஒரு அக்காவும், ஒரு தங்கையும் உள்ளனர். 1ஆம் எதிரியின் அக்காவிற்கு எனது திருமணத்திற்கும் முன்பும் தங்கைக்கு எனது திருமணத்திற்கு பின்பும் திருமணம் நடைபெற்றது. 6ஆம் எதிரி சாலினி 1ஆம் எதிரியின் மூத்த சகோதரி என்றால், சரிதான். 3 முதல் 5 எதிரிகள் எனது திருமணத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் அந்த நேரத்தில் 1ஆம் எதிரியின் குடும்பத்திற்கும் 3 முதல் 5 எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால், சரிதான். 5ஆம் எதிரி எனது திருமணத்திற்கு முன்னிட்டு தற்சமயமும் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார் என்றால் சரிதான். 3 முதல் 5 எதிரிகள் எனக்கும் 1ஆம் எதிரிக்கும் நடந்த பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து செய்ய வந்தார்கள் என்றால், சரிதான்.

2. 3 முதல் 5 எதிரிகளும் எனது அப்பா, ஊர் பஞ்சாயத்தார்களும் சேர்ந்து என்னையும் 1ஆம் எதிரிகளையும் வாழ வைக்க பஞ்சாயத்து செய்தார்கள் என்றால் சரிதான். 6ஆம் எதிரி சாலினியை திருமணம் செய்து கொடுத்து அவர் அவர்கள் வீட்டில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். 6ஆம் எதிரி ஏதேனும் விசேச நாட்களிளோ ஏதேனும் தேவை ஏற்பட்டால் மட்டுமே வருவார் என்றால் , சரிதான். திருமணத்திற்கு பிறகு எனது கணவர் வீட்டில் நானும், எனது கணவர் , மாமியார் ஆகிய மூவர் மட்டும் வசித்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். திருமணத்தின்போது 1ஆம் எதிரி பழ கமிசன் மண்டி, ஜெராக்ஸ் கடை, பைனான்ஸ் வைத்து நடத்தி வந்தார்.

3.1ஆம் எதிரி குடும்பத்திற்கு கிராமத்தில் விவசாயம் உள்ளது என்றால், சரிதான். மேற்படி விவசாய நிலங்களை 2ஆம் எதிரியான எனது மாமியார் காலையில் சென்று விவசாய வேலைகளை செய்வார் என்றால் , சரிதான். 1ஆம் எதிரியும் காலையில்

வேலைக்கு சென்று இரவு பன்னிரண்டு, ஒரு மணிக்குதான் வீட்டிற்கு வருவார் என்றால், சரிதான். அந்த நேரத்தில் நான் மட்டும்தான் வீட்டில் தனியாக இருப்பேன், மாமியார் வேலை முடித்து விட்டு வருவார். 08.05.2024 ஆம் தேதிய புகாரை நான் நேரடியாக AWPS ஆலங்குடியில் கொடுத்தேனா என்றால், இல்லை புதுக்கோட்டை SP ஆபீஸில் கொடுத்தேன். இதற்கு முன்பு கொடுத்தாக சொல்லப்பட்டுள்ள புகார் மனு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி 08.05.2024 தேதிய புகாரினை நான் நேரில் சென்று கொடுத்தேன். 08.05.2024 க்கு முன்பு நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் குறிப்பிட்டு மேற்படி புகாரினை கொடுத்தேன். மேற்படி புகாரை கொடுப்பதற்கு முன்பே 1ஆம் எதிரி விவாகரத்து வழக்கு புதுக்கோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரியும் என்றால், சரிதான். தாக்கல் செய்யதாக எனது கணவர் சொன்னார்.

4. 29.03.2024 ஆம் தேதி காவல் நிலைய விசாரணையின்போது 1ஆம் எதிரி மேற்படி தகவலை சொன்னார். விவாகரத்து வழக்கின் சம்மன் புகாருக்கு பின்புதான் கிடைக்கப்பெற்றது. அதன்பின்பு நான் பேராவூரணி நீதிமன்றத்தில் DVC வழக்கு எதிரிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் 1ஆம் எதிரி திருமணமான முதல் மாதத்திலேயே சந்தேகப்பட்டு அடித்து கொடுமைபடுத்தியதாக சொல்லியுள்ளது சம்மந்தமாக அந்த நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த சமயம் நான் எவ்வித பஞ்சாயத்து வைக்கவில்லை. எனது அப்பா, அம்மா, சித்தப்பாவுக்கு மட்டும்தான் சொன்னேன்.

5. மேற்படி எனது வீட்டார்கள் யாரிடமும் சொல்லி பஞ்சாயத்து செய்யவில்லை என்று சொன்னால், சரிதான். நான் எனது முதல் விசாரணையில் 1ஆம் எதிரி நர்மதா என்ற பெண்ணுடன் தவறாக தொடர்பில் இருப்பதாக சொல்லியுள்ளதை அ.சா.ஆ.1ல் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். SP அலுவலகத்தில் புகார் கொடுத்த பிறகு 27.05.2024 தேதி ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆய்வாளர் என்னிடம் விசாரணை செய்தபோது நான் நர்மதா என்ற பெண் சம்மந்தமாக தகவல்கள் எதுவும் சொன்னேனா என்றால், சொல்லியுள்ளேன். ஆய்வாளர் விசாரணையின்போதோ, முதல் விசாரணையின்போதோ 1ஆம் எதிரி நர்மதா என்ற பெண்ணுடன் தொடர்பு இருப்பதாக கூறப்படும் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

6. 2ஆம் எதிரி எனது கணவருக்கு இருதாரம் என்று ஆரம்பம் முதலே சொல்லி வந்தார். இன்றுவரை எனது கணவர் இரண்டாவது திருமணம் செய்யவில்லை என்றால், சரிதான். விவாகரத்து வழக்கில் ஆஜராகியுள்ள நான் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நானும் 1ஆம் எதிரியும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால், சரிதான். எனது சமூகத்தில் வேறு ஜாதியை சேர்ந்தவர்களுக்கு பெண் கொடுப்பதும், எடுப்பதும் இல்லை என்றால் சரிதான். காதல் திருமணம் செய்பவர்கள் வேறு வேறு சமூகத்தில் திருமணம் செய்து கொள்ளலாம். என்னிடம் காட்டப்படும் ஆவணம் **DVC** வழக்கில் தாக்கல் செய்த மனு ஆகும். அது எ.சா.**1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆவணத்தில் எனக்கு திருமண்த்தின்போது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படும் நகைகளில் 38 பவுன் 1ஆம் எதிரியிடமும் , 9 பவுன் 4 கிராம் நகை என்னிடமும் மொத்தம் 45 பவுன் நகை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் 45 பவுன் நகையில் 9.4 கிராம் நகை என்னிடம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

7. எ.சா.ஆ.1 ல் ஆவணத்தில் 16 பத்தியில் என்னை செட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்கள் பெண் (வரன்) பார்க்க வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். நான் கல்லூரியில் படித்தபோது எனது நண்பர்களுடைய செல்போன் நம்பர் விவரங்கள் 1ஆம் எதிரிக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் டைரி எ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எ.ம.சா.2 ஆவணத்தில் நான் பவுன்ராஜ் என்பவருடன் தவறான தொடர்பில் இருந்ததாக குறிப்புகள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எ.மா.சா.2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பவுன்ராஜ் செட்டியார் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றும் வேறு வேறு ஜாதி என்பதால் திருமணம் செய்து கொடுக்க மறுக்கப்பட்டது என்றால், சரிதான். என்மீது உள்ள குறையை மறைப்பதற்காக 1ஆம் எதிரி மீது பொய்யாக குற்றச்சாட்டுகளை சொல்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் மருந்து குடித்துவிட்டேன் என்று குறிப்பிடும் சங்கதி சம்மந்தமாக தேதி காரணம் தெரியுமா என்றால் , தெரியும். தேதி 25.09.2023 . நான் 1ஆம் எதிரி வீட்டில் வாழ்ந்த வேலையில் 2ஆம் எதிரியின் செல்போன் காணாமல் சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால், சரிதான் . சொல்போன் காணாமல்போன சிறிது காலம் கழித்துதான் 1ஆம் எதிரி வீட்டிற்கு வெளியில் CCTV கேமரா பொருத்தப்பட்டுள்ளது என்றால், சரிதான். இரண்டாவது முறையாக செல்போன் காணாமல் போனபோது எ.சா.ஆ.2 ஆவணம் எனது பீரோவில் இருந்து எடுக்கப்பட்டது

என்றால், சரிதான்.  டைரி எப்போதும் வெளியில்தான் கிடக்கும். நான் பீரோவில் எடுத்து வைத்திருந்தேன்.

8.  1ஆம் எதிரி டைரியை எடுத்து பவுன்ராஜ் காதல் விவகாரம் தெரிந்ததை என்னிடம் 1ஆம் எதிரி கேட்டதால் நான் மருந்தை குடித்துவிட்டதாக நாடகம் ஆடினேன் என்று சொன்னால் , சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் 45 பவுன் எனக்கு போட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.  அ.சா.ஆ.1 புகாருக்கு முன்னதாக 3 முதல் 5 எதிரிகள் எனது தந்தை, பஞ்சாயத்தார்கள் அனைவரும் சேர்ந்து சுமூகமாக பிரிந்து போய்விடுங்கள் என்று சொன்னார்கள் என்றால், சரிதான்.  மேற்படி பஞ்சாயத்து பேசியது சம்மந்தமாக எனது தந்தையும் 3, 4 எதிரிகளும் சேர்ந்து ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தத்தின் தேதி 27.01.2024 என்றால் சரிதான்.  அந்த ஒப்பந்தத்தில் மொத்த 45 பவுனில் 27 பவுன் அடமானத்தில் உள்ளது போக மற்ற நகைகள் ஏற்கனவே என்னிடம் உள்ளது என்றும், அடமானம் நகைகளை 1ஆம் எதிரி திருப்பி தர வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது தகப்பனார் 1ஆம் எதிரிக்கு கொடுத்த 5 பவுன் நகை விவரம் அந்த ஒப்பந்தத்தில் குறிப்பிட படாமல் விடுபட்டு உள்ளது. மேற்கண்ட விவரங்களை அ.சா.ஆ.1 புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான்.  மேற்படி ஒப்பந்தத்திற்கு பின்பு எந்த கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை.

9. 27 பவுன் நகையை 1ஆம் எதிரி மொய் போடுவதற்காக  எனது பெயரில் அடகு வைத்துள்ளார்  என்றால் சரிதான்.  மேற்படி விவரம் எ.சா.ஆ.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருமணத்தின்போது 1ஆம் எதிரி தரப்பில் எனக்கு 9 ½ பவுன் தாலி செயின்  பொட்டு போன்றவை என்னிடம் உள்ளது என்றால்  சரியல்ல.  2 1/2 பவுன்தான் என்னிடம் உள்ளது.   வங்கியில் உள்ள 27 ½ பவுன் நகையை என்னிடம் திருப்பி தரவில்லை.  என்னிடம் காட்டப்படும் வீடியோ பதிவில் உள்ள நபர் நான்தான்.  அது 03.06.2023 ஆம் தேதியில் 1ஆம் எதிரியால் என் வசம் கொடுக்கப்பட்ட 9 பவுன் 4 கிராம் நகை சம்மந்தப்பட்டதாகும் . மேற்படி நகை என் வசம்தான் உள்ளது.  மேற்படி வீடியோ அடங்கிய **CD** எ.சா.ஆ.**3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** மேற்படி வீடியோ பதிவு செய்யப்பட்டதற்கான **65 B** சான்றிதழ் எ.சா.ஆ**. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** என்னிடம் காட்டப்படும் வீடியோவில் 27 பவுன் நகை வங்கி மேலாளர் என்னிடம் கொடுத்து நான் சரிபார்த்து பெற்றுக் கொண்டுள்ளேன் என்றால் , சரிதான்.  ஆனால் வங்கியிலிருந்து வெளியே வந்தபின்பு 3 முதல் 5 எதிரிகள் வாங்கி சென்று விட்டார்கள்.

நான் சொல்வதுபோல் 3 முதல் 5 எதிரிகள் எவ்வித நகையும் வாங்கி செல்லவில்லை என்றாலும் அனைத்து நகைகளையும் நான் பெற்றுக்கொண்டு ஜீவானாம்சாமாக ரூ. ஐம்பது இலட்சம் கொடுத்தால்தான் விவாகரத்து கொடுப்பேன் என்றும், சொல்லி 1ஆம் எதிரி விவாகரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தில் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், 1ஆம் எதிரி எந்தவித நகையும் கொடுக்க வேண்டியது இல்லை என்றும், எதிரிகளிடம் இருந்து பணம் பெறும் நோக்கில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனக்கு விவாகரத்து சம்மன் கையில் கிடைக்கப்பெற்ற பிறகு நான், எனது தந்தை, எனது தாயார் மூவரும் சென்று பிரச்சனை செய்துவிட்டு 1ஆம் எதிரியின் மீது பொய் புகார் கொடுப்பட்டுள்ளது என்றால் , சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கும் எந்தவித சம்மந்தம் இல்லை. வங்கியில் இருந்து வெளியே வந்தபிறகு 3 முதல் 5 எதிரிகள் என்னிடம் இருந்த நகைகளை வாங்கி சென்றுவிட்டது சம்மந்தமாக நான் எந்தவித புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான். இவ்வழக்கிலும் மேற்கண்ட விவரங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை இல்லை.</u>